# கோயம்புத்தூர் மாநகராட்சி

**அனுப்புநர்**

**திரு ஆர். வெங்கடாசலம்,**
**மேயர்,**
**கோயம்புத்தூர் மாநகராட்சி,**
**கோயம்புத்தூர்- 641 001**

**பெறுநர்**

**மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,**
**வார்டு குழுத்தலைவர்கள், ஆளும்கட்சி**
**மற்றும் எதிர் கட்சித் தலைவர்கள்,**
**நியமனக்குழு உறுப்பினர்,**
**நிலைக்குழு தலைவர்கள் மற்றும்**
**அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,**
**கோயம்புத்தூர் மாநகராட்சி.**
**அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,**
**கோயம்புத்தூர் மாநகராட்சி.**
**சட்டமன்ற உறுப்பினர்கள்**
**(கோவை கிழக்கு, மேற்கு,**
**தொண்டாமுத்தூர், பேரூர் மற்றும்**
**சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதிகள்),**
**பாராளுமன்ற உறுப்பினர்கள்**
**(கோவை மற்றும் நீலகிரி**
**பாராளுமன்றத் தொகுதிகள்)**

**ந.க.எண் : 4991/ 2008 / எம்சி. 8 நாள் : 22.4.2008**

**அய்யா /அம்மா,**

**பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற சாதாரணக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.**

-----------

**கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம் வருகின்ற 28.4.2008 திங்கள்கிழமை காலை 10.30 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத்தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் அனுப்பப்படுகிறது.**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**இணைப்பு : 1**

**/ உண்மைநகல் / உத்திரவின்படி/**

2/4/08

**மாமன்ற செயலாளர்**

**நகல் :**

**துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி**
**ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி**

## ஏப்ரல் 2008 மாமன்ற சாதாரண கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்** |
| **1** | வடக்கு மண்டலம் -2008-09 குத்தகை இனங்கள் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **2** | நகரமைப்புப் பிரிவு - மேற்கு மண்டலம் - ராமலிங்கம் காலனி மாநகராட்சி குடியிருப்பு - உரிமை மாற்றம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **3** | நகரமைப்புப் பிரிவு - கிழக்கு மண்டலம் -புலியகுளம் மாநகராட்சி குடியிருப்பு - அடிப்படை ஊழியர்களுக்கு சொந்தமாக்குதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **4** | பொதுப்பிரிவு-பெண் மருத்துவ அலுவலர் நியமனம் செய்வது-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| **5** | நகரமைப்பு பிரிவு - மாநகராட்சி காந்திபார்க் ஓட்டுநர் குடியிருப்பு எண் 105 –வாரிசுகளுக்கு உரிமை மாற்றம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **6** | நகரமைப்புப் பிரிவு - தெற்கு மண்டலம் -நகரளவு எண் 2919 /3, 2920 /1 - 2.11 ஏக்கர் நிலம் - நில உபயோக மாற்றம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **7** | பொதுப்பிரிவு -டெக்ஸ்கோ நிறுவன ஓட்டுநர்கள் - 2008-09 –ஒப்பந்தம் நீட்டிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **8** | கிழக்கு மண்டலம் - குத்தகை இனங்கள் -ஒப்படை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **9** | கிழக்கு மண்டலம் - சிங்காநல்லூர் பேருந்து நிலைய உணவகம் - நஞ்சுண்டாபுரம் ரோடு வணிக வளாகக் கடைகள் - ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது – ஒப்படை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **10** | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண் 64- மேட்டுப்பாளையம் சாலை மொத்த காய்கறி வளாக சாலை புதுப்பித்தல் பணி- ரூ.20 இலட்சம் மதிப்பீடு- நிர்வாக அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **11** | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண் 64- மேட்டுப்பாளையம் சாலை மொத்த காய்கறி வளாக மைதான சாலை புதுப்பித்தல் பணி- ரூ.20 இலட்சம் மதிப்பீடு-நிர்வாக அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **12** | நகரமைப்புப் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண் 64 –சேர்மன் ராஜு நகர் -சாலை அமைக்க நில ஆர்ஜிதம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **13** | வருவாய் பிரிவு - சொத்துவரி – பொது சீராய்வு - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **14** | நகரமைப்புப் பிரிவு - அமரர் ராஜீவ்காந்தி திருவுருவச் சிலை நிறுவுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **15** | பொதுப்பிரிவு - ஓட்டுநர் பணியிடங்கள் தோற்றுவித்தல் மற்றும் பணியிடங்கள் நிரப்புதல் -மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக. |

நன்றியுரை

## திருக்குறள்

**உள்ள முடைமை உடைமை பொருளுடைமை**
**நில்லாது நீங்கி விடும்.**

(குறள் - 592)

## விளக்கம்

**ஊக்கம் எனும் ஒரு பொருளைத் தவிர, வேறு எதனையும் நிலையான உடைமை என்று கூற இயலாது.**

திருவள்ளுவர்.

---

## ஆ. தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி

**இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய/குடிமகளாகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் சமூக வேற்றுமையை, மனம்,வாக்கு,செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதி அளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சாதி, சமய வேறுபாடற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும். மேலும், தீண்டத்தகாதவர்கள் என்ற கொடுமைக்கு ஆளாகியுள்ள மக்களிடையே காணப்படும் தீண்டாமை உணர்வையும் போக்குவது நமது சமூகக் கடமை என்பதையும் உணர்ந்து செயல்படுவேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப் பற்றிற்கும் இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.**

---

## மாமன்ற சிறப்புத் தீர்மானம் 1 நாள் 28.4.2008

பொருள் - ஓட்டுநர்களாகப் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்களை நிரந்தர ஓட்டுநர்களாக பணி உத்தரவு வழங்க தீர்மானம் நிறைவேற்றக் கோருதல்

--------

கோவை மாநகராட்சியில் சேகரிக்கப்படும் குப்பைகள், லாரிகள் மற்றும் ஆட்டோக்கள் முதலான வாகனங்கள் மூலமாக அப்புறப்படுத்தப்படுகின்றன. மேற்படி வாகனங்களை இயக்கும் ஓட்டுநர்கள் 24 பேர் மட்டுமே நிரந்தர பணியாணை பெற்று வேலை செய்து வருகின்றனர். மீதமுள்ள 61 வாகனங்களை ஓட்டுநர் உரிமம் பெற்ற துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் குடிநீர் பிரிவு ஊழியர்கள் கடந்த 11 ஆண்டுகளாக இயக்கி வருகிறார்கள். அவ்வாறு இயக்குவதற்கு நமது மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் அவ்வப்போது பணி உத்திரவுகள் வழங்கி உள்ளார்கள். வேலை வாகனம் ஓட்டுவதாகும். ஆனால் 11 ஆண்டுகளாக துப்புரவுப் பணியாளர்களின் சம்பளமே பெற்று வருகிறார்கள்.

பல சந்தர்ப்பங்களில் அவர்கள் தங்களை ஓட்டுநர்களாகவே பணியமர்த்தக் கோரியுள்ளனர். ஆனால் 1996 ம் ஆண்டின் பணி நியமன ஆணை அதற்குத் தடையாக உள்ளது. ஆகவே 1996 ம் ஆண்டின் அரசாணையை தளர்த்திடவும், கல்வித்தகுதி கருதாமல் கனரக வாகன ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ள 11 ஆண்டுகளாக ஓட்டுநர்களாக பணிபுரிந்து வரும் துப்புரவுப் பணியாளர்களை நிரந்தர ஓட்டுநர்களாகப் பணியமர்த்திட தமிழக அரசை கேட்டுக் கொள்ள மாமன்றம் தீர்மானம் நிறைவேற்றவேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாமன்றக்குழு கேட்டுக் கொள்கிறது.

<u>மா.ம.தீர்மானம் எண் : 1 நாள் : 28.04.2008</u>

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 1

பொருள் - குத்தகை கோவை மாநகராட்சி வடக்கு மண்டலம் 2008-09ம் ஆண்டு குத்தகை இனங்களுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப் புள்ளிகளில் கோரப்பட்ட உச்சகேள்விகளுக்கு ஒப்புதல் வழங்குவது தொடர்பாக

----------------

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலம் 2008-09ம் ஆண்டுக்கான கீழ்கண்ட குத்தகை இனங்களுக்கு ஆணையாளர் அவர்கள் உத்தரவுப்படி 22.2.2008, 28.2.2008, 13.3.2008, 18.3.2008, 27.3.2008 மற்றும் 31.3.2008 ஆகிய தேதிகளில் பொது ஏலம் மற்றும் மறு ஏலம் மறு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டது. ஏலதாரர்களால் கேட்கப்பட்ட உச்சகேள்விகள் விவரம் வருமாறு-

| வ.எண் | ஏல இனங்கள் | சென்ற ஆண்டு ஏலத்தொகை | மூன்றாண்டு சராசரி தொகை | தற்போது கேட்கப்பட்ட உச்சகேள்வி | உச்சகேள்வி தாரர் பெயர் |
|---|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. | |
| 1. | நவீன கட்டண கழிப்பிடம் கணபதி | 4,23,765/- | 3,67,527/- | 3,21,500/- | R. சுப்புராஜ் |
| 2, | சீனிவாசபுரம் காந்திபுரம் கட்டண கழிப்பிடம் | 3,84,345/- | 3,30,348/- | 3,55,000/- | K. முத்துவேல் |
| 3. | சத்திரோடு ஆடுமாடு அறுவைமனை | 3,49,000/- | 2,06,333/- | 2,07,000/- | A.சாதிக் |

வரிசை எண் 2, கடந்த ஆண்டை விட குறைவாகவும் மூன்றாண்டு சராசரியை விட கூடுதலாகவும் ஏலம் கேட்கப்பட்டுள்ளது. இந்த இனத்திற்கு ஐந்து முறை ஏலம் கோரப்பட்டது.

வரிசை எண்.3, கடந்த ஆண்டைவிட குறைவாகவும், மூன்றாண்டு சராசரி தொகையைவிட கூடுதலாகவும் ஏலம் கேட்கப்பட்டுள்ளது. இந்த இனத்திற்கு ஆறுமுறை ஏலம் கோரப்பட்டது.

வரிசை எண்1, கடந்த ஆண்டைவிட குறைவாகவும், மூன்றாண்டு சராசரியை விடவும் குறைவாக ஏலம் கேட்கப்பட்டுள்ளது. இந்த இனத்திற்கு ஐந்து முறை ஏலம் கோரப்பட்டது. இருப்பினும் எவரும் அதிகமாக ஏலம் கோர முன் வரவில்லை.

2008-09ம் ஆண்டு குத்தகை இனங்கள் மாநகராட்சி பணியாளர்களை கொண்டு வசூல் செய்திட போதுமான பணியாளர்கள் இல்லை என்பதாலும் இந்த ஆண்டு ஆறுமுறை ஏலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளதாலும் 31.3.2008 அன்றுக்குள் ஒப்படைக்க வேண்டிய அவசர அவசியம் இருந்ததாலும், மேற்கண்ட மூன்று இனங்களுக்கான உச்ச கேள்விகளை அங்கீகரிக்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டு 31.3.08 அன்று வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்படைக்கப்பட்டது.

இது சம்பந்தமாக பின் ஏற்பாக மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண் - 15359/06/அ2(வ)

<u>மா.ம.தீர்மானம் எண் : 2 நாள் : 28.04.2008</u>

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 2

கோயம்புத்தூர் மாநகராட்சி இராமலிங்கம் காலனியில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான குடியிருப்பு எண். ப.எண் 91, புதிய எண் 85 -ஐ காலமான ஒதுக்கீட்டாளர் திருமதி. எம். லட்சுமி அவர்களின் சகோதரியும், வாரிசுதாரருமான (லேட்) திருமதி. அலமேலு அம்மாள் அவர்களின் வாரிசுதாரரும், மகனுமான திரு. எம்.ஜி. சுப்ரமணியன் என்பவர் மேற்படி குடியிருப்பினை தனது பெயருக்கு கிரயம் செய்து வழங்குமாறு 20.7.2007 -ம் தேதிய விண்ணப்பத்தில் கோரியுள்ளார்.

மேற்படி, கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமான இராமலிங்கம் காலனியில் உள்ள குடியிருப்பு எண். 91 திருமதி. எம். லட்சுமி என்பவர்க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. திருமதி. எம். லட்சுமி அவர்கள் 9.7.1979 -ம் தேதி காலமாகிவிட்டதால், அவருடைய சகோதரியும், வாரிசுதாரருமான திருமதி. அலமேலு அம்மாள் அவர்களுக்கு அக்குடியிருப்பினை கிரயம் செய்து வழங்க வழக்கு எண். 1059/ 85 கோயம்புத்துர் மாவட்ட உரிமையியல் நடுவர் நீதி மன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டது.

திருமதி. அலமேலு அம்மாள் அவர்களுக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டதின்பேரில், மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டு, மாமன்ற தீர்மான எண். 126, நாள் 14.9.2006 –ல் திருமதி. அலமேலு அம்மாள் அவர்களுக்கு குடியிருப்பினை கிரயம் செய்ய அனுமதித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. முத்திரைத்தாள் வாங்கி சமர்ப்பிக்குமாறு திருமதி. அலமேலு அம்மாள் அவர்களுக்கு 29.11.2006 -ல் மாநகராட்சியில் கடிதம் அனுப்பப்பட்டது. இந்நிலையில் திருமதி. அலமேலு அம்மாள் 25.5.2007 அன்று காலமாகிவிட்டார். தற்போது திருமதி. அலமேலு அம்மாளின் மகனும், வாரிசுதாரருமான திரு. எம். ஜி. சுப்ரமணியன் மேற்படி குடியிருப்பினை தனது பெயருக்கு மாற்றம் செய்து வழங்குமாறும், (லேட்) திருமதி. அலமேலு அம்மாள் இறப்புச்சான்றிதழ், வாரிசு சான்றிதழ் மற்ற வாரிசுகளான, சகோதரிகளிடமிருந்து பெறப்பட்ட ஆட்சேபனையின்மை நோட்டரி அபிடவிட் உறுதிபத்திரம் ஆகியவை இணைத்துள்ளார்.

எனவே காலஞ்சென்ற திருமதி. அலமேலு அம்மாளின் வாரிசுதாரரும், மகனுமான திரு. எம். ஜி. சுப்ரமணியன் அவர்களுக்கு மேற்படி குடியிருப்பினை உரிமை மாற்றம் செய்து வழங்க மாநகர மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் செய்யலாம் ந.க. எண் 373 / 2003 / H1(W) MH5

<u>மா.ம.தீர்மானம் எண் : 3 நாள் : 28.04.2008</u>

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 3

பொருள் . மாநகராட்சி குடியிருப்பு - கோயம்புத்தூர் மாநகராட்சி - கிழக்கு மண்டலம் மாநகராட்சிக்கு சொந்தமான புலியகுளம் குடியிருப்பு - அரசாணையின்படி அதில் குடியிருந்து வரும் அடிப்படை ஊழியர்களுக்கு சொந்தமாக்குதல் - தொடர்பாக.

------------

கோயம்புத்தூர் மாநகராட்சி, புலியகுளம் ரெட்பீல்ஸ் ரோட்டில் உள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான 14 குடியிருப்பில் குடியிருந்து வரும் மாநகராட்சி கடைநிலை ஊழியர் சங்கத்தினர் மேற்கண்ட குடியிருப்பில் பல ஆண்டுகளாக குடியிருந்து வருவதாகவும், மாநகராட்சியின் மற்ற குடியிருப்புகளை அதில் குடியிருப்பவர்களுக்கே உரிமை மாற்றம் செய்தது போல் இக்குடியிருப்பையும் அதில் குடியிருப்பவர்களுக்கே உரிமை மாற்றம் செய்து தருமாறு கோரியுள்ளனர்.

மாமன்றம் தனது தீர்மான எண். 486 நாள். 12.8.83 -ல் புலியகுளம் மாநகராட்சி அடிப்படை ஊழியர்களின் குடியிருப்புகளை உரிமையாக்கித்தர கொடுத்த கோரிக்கையினை அரசுக்கு அனுப்புமாறு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

அரசாணை எண். 1542 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை நாள். 12.10.83 -ல் தற்போதைய சந்தை விலை அடிப்படையில் நில மதிப்பு மற்றும் கட்டிடத்தின் மதிப்பினை மாவட்ட ஆட்சியர் மற்றும் மாநகராட்சி பொறியாளர் ஆகியோர் நிர்ணயம் செய்து 14 குடியிருப்புக்களையும், அதில் குடியிருந்து வரும் அடிப்படை ஊழியர்களுக்கே விற்பனை செய்ய அனுமதி வழங்கியுள்ளது.

அரசாணை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டதில் தனது தீர்மான எண். 1033 நாள் 21.12.83 -ல் மனையிடத்திற்கு விலை நிர்ணயம் செய்துதர மாவட்ட ஆட்சித் தலைவரையும், கட்டிடத்திற்கு மதிப்பீடு செய்துதர மாநகராட்சி பொறியாளரையும் கேட்கலாம் எனவும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

மாநகர பொறியாளர் தமது அலுவலக குறிப்பு எண். 47098/87/D12. நாள். 8.5.87 -ல் மேற்படி கட்டிடம் ஒவ்வொன்றிற்கும் கட்டிட மதிப்பு ரூ. 17,500/- என நிர்ணயம் செய்து குறிப்பு சமர்ப்பித்துள்ளார்.

மாவட்ட வருவாய் அலுவலர் தமது ப.மு எண். 205070/87 ஊது நாள். 16.6.89 -ல் புலியகுளம் கிராமம், க.ச. எண். 2992 நெ. காலைக்கு சதுரடிக்கு ரூ. 62/- என நில மதிப்பு நிர்ணயம் செய்யப்படுகிறது என தெரிவித்துள்ளனர்.

ஆனால் புலியகுளம் மாநகராட்சி குடியிருப்போர் நல சங்க செயலாளர் 5.8.91 மற்றும் 19.2.96 -ம் தேதிய விண்ணப்பங்களில் அரசு ஆணை எண். 1542/83 நாள். 12.10.83 -ல் கண்டவாறு 83 -ம் ஆண்டு நிலக்கிரைய மதிப்பு அடிப்படையில் குடியிருப்புகளை விலைக்கிரயம் செய்து தரும்படி கோரியுள்ளார்.

இது தொடர்பாக வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தலைவரின் கருத்து கோரப்பட்டதில், தமது 22.1.98 -ம் தேதியிட்ட குறிப்பில் குழு உறுப்பினர்களுடன் விவாதிக்கப்பட்டது எனவும், மாவட்ட வருவாய் அலுவலர் 16.6.98 -ல் சதுரடி ஒன்றிற்கு ரூ. 62/- என நில மதிப்பு நிர்ணயம் செய்துள்ளதையே எடுத்துக் கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

புலியகுளம் ரெட் பீல்ட்ஸ் சாலையில் உள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான அடிப்படை ஊழியர் குடியிருக்கும் குடியிருப்பு மனையின் நில மதிப்பு சதுரடி ஒன்றிற்கு ரூ. 62/- என நிர்ணயம் செய்ய மாமன்றம் தனது தீர்மானம் எண். 1 நாள். 1.4.98 -ன் மூலம் அனுமதி வழங்கி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

நிர்வாகப் பொறியாளர்(கிழக்கு) அவர்கள் தமது 18.12.98 -ம் தேதிய குறிப்பில் 14 குடியிருப்புகளுக்கு கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு இடம் மற்றும் கட்டிட மதிப்புகளின்படி தொகை வசூல் செய்யலாம் என குறிப்பிட்டுள்ளார்.

புலியகுளம் மாநகராட்சி குடியிருப்பு

| வ. எண் | கதவு எண் | குடியிருப்போர் பெயர் | இடத்தின் பரப்பளவு | இடத்தின் மதிப்பு Per Sq,ft. Rs. 62/- | கட்டிடத்தின் மதிப்பு ரூ | மொத்தம் ரூ |
|---|---|---|---|---|---|---|
| 1 | 86 | திரு. ராகவன் | 711 | 44082 | 17500 | 61582 |
| 2 | 87 | திரு. பக்ருதின் | 659 | 40858 | 17500 | 58358 |
| 3 | 88 | திரு. தெய்வசிகாமணி | 656 | 40672 | 17500 | 58172 |
| 4 | 89 | திரு. எம்.கே. முகமது | 679 | 42098 | 17500 | 59598 |
| 5 | 90 | திரு. கே.கே. விருதுண்ணி | 632 | 39184 | 17500 | 56654 |
| 6 | 91 | திரு. எஸ். சுப்பரமணியம் | 740 | 45880 | 17500 | 63380 |
| 7 | 92 | திரு. சி.டி. ராமசாமி | 711 | 44082 | 17500 | 61582 |
| 8 | 93 | திரு. வி. ராமச்சந்திரன் | 538 | 33356 | 17500 | 50856 |
| 9 | 94 | திரு. சாமியப்பன் | 648 | 40176 | 17500 | 57676 |
| 10 | 95 | திரு. பி. கிருஷ்ணன் | 730 | 45260 | 17500 | 62760 |
| 11 | 96 | திரு.எஸ். மதலைமுத்து | 715 | 44330 | 17500 | 61830 |
| 12 | 97 | திரு. பி. சுப்ரமணி | 515 | 31930 | 17500 | 49430 |
| 13 | 98 | திரு. பட்டுலிங்கம் | 485 | 30070 | 17500 | 47570 |
| 14 | 99 | திரு. சி.பி. ராமசாமி | 488 | 30256 | 17500 | 47756 |

எனவே அரசாணை எண். 1542 நாள். 12.10.83 -ன் உத்தரவின்படி, மாநகர பொறியாளர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலரால் மேற்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள விலை விகிதத்தில் மொத்தத் தொகையினையும் வசூலித்துக் கொண்டு பின்னர் மேற்படி பட்டியலில் கண்டுள்ள வரிசை எண் 4,6,10,11,12 ஆகிய குடியிருப்புகளை கீழ்க்காண் மாநகராட்சி அலுவலக பணியாளர்களுக்கு அவர்களது பெயரில் கிரையம் செய்து கொடுக்கவும்,

| வ. எண் | கதவு எண் | ஒதுக்கீட்டாளர்கள் | இடத்தின் பரப்பளவு | இடத்தின் மதிப்பு Per Sq,ft. Rs. 62/- | கட்டிடத்தின் மதிப்பு ரூ | மொத்தம் ரூ |
|---|---|---|---|---|---|---|
| 4 | 89 | திரு. எம்.கே. முகமது | 679 | 42098 | 17500 | 59598 |
| 6 | 91 | திரு. எஸ். சுப்பரமணியம் | 740 | 45880 | 17500 | 63380 |
| 10 | 95 | திரு. பி. கிருஷ்ணன் | 730 | 45260 | 17500 | 62760 |
| 11 | 96 | திரு.எஸ். மதலைமுத்து | 715 | 44330 | 17500 | 61830 |
| 12 | 97 | திரு. பி. சுப்ரமணி | 515 | 31930 | 17500 | 49430 |

வரிசை எண். 1,2,3,5,7,8,13,14 -ல் குறிப்பிட்டுள்ள கீழ்க்காண் பணியாளர்கள் இறந்துவிட்டபடியால் அவர்களது இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழ், வாரிசு சான்றிதழில் குறிப்பிட்டுள்ளவர்கள் பெயரில் நோட்டரி பப்ளிக் மூலம் தெரிவித்துள்ள ஆட்சேபனையின்மை சான்று மற்றும் மாநகராட்சி வழக்கறிஞர் அவர்களின் 26.7.2007-ம் தேதிய சட்ட கருத்தின் அடிப்படையிலும் மேற்படி வாரிசுதாரர்களுக்கு கீழ்க்காணும் குடியிருப்புகளை நிலம் மற்றும் கட்டிட மதிப்புத் தொகையினை முழுமையாக வசூலித்த பின்னர் கிரையம் செய்யவும்,

| வ. எண் | கதவு எண் | காலமான ஒதுக்கீட்டாளர்கள் | வாரிசுதாரர் பெயர் மற்றும் உறவு முறை | இடத்தின் பரப்பளவு | இடத்தின் மதிப்பு Per Sq,ft. Rs. 62/- | கட்டிடத்தின் மதிப்பு ரூ | மொத்தம் ரூ |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 86 | திரு. ராகவன் | திருமதி. T.V. ஜானகி மனைவி | 711 | 44082 | 17500 | 61582 |
| 2 | 87 | திரு. பக்ருதின் | திருமதி. மெகமுதா மனைவி | 659 | 40858 | 17500 | 58358 |
| 3 | 88 | திரு. தெய்வசிகாமணி | திருமதி. P. தங்கம்மாள் மனைவி | 656 | 40672 | 17500 | 58172 |
| 5 | 90 | திரு. கே.கே. விருதுண்ணி | திரு. V. ஷாஜி மகன் | 632 | 39184 | 17500 | 56654 |
| 7 | 92 | திரு. சி.டி. ராமசாமி | திரு. R. ராஜேந்திரன் மகன் | 711 | 44082 | 17500 | 61582 |
| 8 | 93 | திரு. வி. ராமச்சந்திரன் | திருமதி. சரஸ்வதி மனைவி | 538 | 33356 | 17500 | 50856 |
| 13 | 98 | திரு. பட்டுலிங்கம் | திருமதி. ராஜம்மாள் மனைவி | 485 | 30070 | 17500 | 47570 |
| 14 | 99 | திரு. சி.பி. ராமசாமி | திரு. N. ரங்கராஜன். பேரன் | 488 | 30256 | 17500 | 47756 |

வரிசை எண் 9 -ல் குறிப்பிட்டுள்ள திரு. சாமியப்பன், என்பவர் காலமாகிவிட்டார். ஆனால் இவரது வாரிசுகள் எவரும் உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கவில்லை. எனவே உரிய சான்றிதழ் அளிக்கும் பட்சத்தில் இவரது வாரிசுகளுக்கு தொகை முழுவதையும் பெற்ற பின்னர் கிரையம் செய்யவும். மேற்கூறிய குடியிருப்புக்களை கிரையம் செய்யவும் கிரையச் செலவுகள் அனைத்தும் சம்பந்தப்பட்டவர்களே செலுத்தும்படி கோர மாமன்றத்தின் முடிவுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு -மாமன்றம் முடிவு செய்யலாம் ந.க.எண் 5795/1983/ கிஎச்.1.

**மா.ம.தீர்மானம் எண் : 4 நாள் : 28.04.2008**

1. பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள புலியகுளம் மாநகராட்சி குடியிருப்பு வரிசை எண் 4,6,10,11, மற்றும் 12-ல் உள்ள 5 குடியிருப்புகளை பொருளில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள விலை விகிதத்தில் மொத்த தொகையினையும் மேற்படி குடியிருப்புகளில் குடியிருந்து வரும் மாநகராட்சி பணியாளர்களிடமிருந்து வசூலித்தபின்னர் மேற்படி குடியிருப்புகளில் குடியிருந்து வரும் மாநகராட்சி பணியாளர்களின் பெயரில் சம்பந்தப்பட்ட பணியாளர்களின் செலவில் கிரையம் செய்து கொடுக்க அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

2. பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள புலியகுளம் மாநகராட்சி குடியிருப்பு வரிசை எண் 1,2,3,5,7,8,9,13 மற்றும் 14-ல் உள்ள 9 குடியிருப்புகளை பொருளில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள விலை விகிதத்தில் மொத்த தொகையினையும், குடியிருப்பு ஒதுக்கீட்டாளர்களின் வாரிசுதாரர்களிடமிருந்து வசூலித்தபின்னர் மேற்படி குடியிருப்பு ஒதுக்கீட்டாளர்களின் வாரிசுகளுக்கு சம்பந்தப்பட்ட வாரிசுகளின் செலவில் கிரையம் செய்து கொடுக்க அனுமதிக்கலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 4**

பொருள் பணியமைப்பு –கோவை மாநகராட்சி– பெண் மருத்துவ அலுவலர்/ மருத்துவ அலுவலர் (மருந்தகம்) – பணியிடங்கள் மன்றத்தின் அனுமதியை பெற்று அரசின் உறுதியாக்கத்திற்கு உட்பட்டு நியமனம் செய்தல் - தொடர்பாக

* * * * * * *

இம்மாநகராட்சியில் காலியாக உள்ள நான்கு பெண் மருத்துவ அலுவலர் மற்றும் ஒரு மருத்துவ அலுவலர் (மருந்தகம்) பணியிடங்களுக்கு நேரிடை நியமனம் செய்ய உதவி இயக்குநர், தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம் சென்னை அவர்களின் கடிதம் எண்.எக்ஸ்.2, எப்.0256/ 2007, நாள் 16. 03. 2008 மற்றும் ஏஸ்.2/692/07, நாள் 14.3.2008 ல் தகுதியான நபர்களின் பெயர்ப் பட்டியல் பெறப்பட்டுள்ளது.

இவர்களை 21.04.2008 அன்று மாலை 4.00 மணியளவில் மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் நியமனக்குழு முன்னிலையில் அனைத்து அசல் சான்றிதழ்களுடன் ஆஜராக கோரியதன் பேரில், கீழ்கண்ட ஒரு நபர் மட்டும் ஆஜரானார். இவரை நியமனக்குழு தனது தீர்மான எண்.61 நாள் 21.04.2008ல் தேர்வு செய்துள்ளது.

கோவை மாநகராட்சி சட்டம் பிரிவு 106 (2) (b) ன் படி வகுப்பு II-ன் கீழ் வரும் பதவிகளை அரசின் உறுதியாக்கத்திற்கு உட்பட்டு மாமன்றம் நிரப்பலாம் என்பதால் மாமன்றத்தின் அனுமதி பெற்று அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு பெண் மருத்துவ அலுவலர் பணியிடத்தில் 8000-275-13500 என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் பணி நியமனம் செய்ய மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பெயர்/ விலாசம் | இனவாரி சுழற்சி | பிறந்த தேதி | வயது | கல்வி தகுதி | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1) | ஜி.நிவேதிதா ஆர்த்தி, 12/2பெரியார் நகர், அண்ணாநகர் பிரிவு, பீளமேடு, கோயம்புத்தூர் - 641 004. | R.No1. General turn Priority (Women) | 03/02/1984 | 24 | மருத்துவ பட்ட படிப்பு (மெடிசன் & சர்ஜரி (எம்.பி.பி.எஸ்) | |

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம். ந.க.எண். 2377/2007/எம்.சி.1

**<u>மா.ம.தீர்மானம் எண் : 5 நாள் : 28.04.2008</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 5**

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமான காந்திபார்க் ஓட்டுநர் குடியிருப்புகள் அரசாணை (நிலை)எண். 1753 நகர்புற வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிர்வாகத் துறை நாள். 26.11.1983 -ல் அங்கு குடியிருப்போர்க்கே தவணை முறை திட்டத்தின்கீழ் நிலம் மற்றும் கட்டிடத்தின் மதிப்பினை செலுத்தி முழுதொகை செலுத்திய பின்னர் அக்குடியிருப்பினை அவர்களது பெயருக்கு உரிமை மாற்றம் செய்ய ஆணையிட்டது.

இதன்படி குடியிருப்பு எண். 105, திரு. எஸ்.பி. ராஜு என்பவர்க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் முழுத்தொகை மாநகராட்சிக்கு செலுத்திய ஒதுக்கீட்டாளர் திரு. எஸ்.பி. ராஜு அவர்கள் 23.6.1990 -ல் காலமாகிவிட்டார். அதனை தொடர்ந்து அவரது வாரிசுதாரரான திருமதி. பழனியம்மாள் என்பவருக்கு மேற்படி, குடியிருப்பினை உரிமை மாற்றம் செய்ய மாநகர மன்றத் தீர்மானம் எண். 261 நாள். 28.11.2000 -ல் ஒப்புதல் அளித்து இதன்படி முத்திரைத்தாள் வாங்கி மாநகராட்சிக்கு சமர்ப்பிக்குமாறு 15.12.2000 -ல் கடிதம் அனுப்பப்பட்டதில், மேற்படி குடியிருப்பினை திருமதி. பழனியம்மாள் பெயருக்கு உரிமை மாற்றம் செய்யும் தருவாயில், அவரது வாரிசும், மகனுமான திரு. ஆர். பாஸ்கரன் என்பவர் தனது தாயார் பெயருக்கு மட்டும், உரிமை மாற்றம் செய்யக் கூடாது என்றும், திரு. எஸ்.பி. ராஜு (லேட்) ன் வாரிசுதாரர்களான (1). திருமதி. பழனியம்மாள், (2) திருமதி. ஆர். தமிழ்செல்வி, (3) திரு. ஆர். பாஸ்கரன் மற்றும் (4) திருமதி ஆர். ஜீவராணி ஆகிய நான்கு பேர்களுக்கும் குடியிருப்பினை உரிமை மாற்றம் செய்து கொடுக்க வேண்டும் என்று கோயம்புத்தூர் 3வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்ததின் பேரில், வழக்கின் முடிவில் தீர்ப்பாணை அ.வ. எண். 3384/ 2004, நாள். 23.8.2006 -ன்படி, 4வது வாதியாக வழக்கில் சேர்க்கப்பட்டுள்ள மாநகராட்சிக்கு, மேற்கூறிய வாரிசுதாரர்கள் நால்வருக்கும் கூட்டாக கிரைய பத்திரம் எழுதி கொடுக்க வேண்டும் என்று செயலுருத்துக் கட்டளைப் பரிகாரம் பிறப்பித்து தீர்ப்பளித்துள்ளது.

எனவே, நீதிமன்ற உத்திரவுப்படி காந்திபார்க் ஓட்டுநர் குடியிருப்பு எண். 105 -னை ஒதுக்கீட்டாளர் திரு. எஸ். பி. ராஜூ அவர்களின் வாரிசுதாரர்களான

| வரிசை எண் | வாரிசுதாரர் பெயர் | உறவுமுறை |
|---|---|---|
| (1) | திருமதி. பழனியம்மாள் | மனைவி |
| (2) | திருமதி. ஆர். தமிழ்ச்செல்வி | மகள் |
| (3) | திரு. ஆர். பாஸ்கரன் | மகன் |
| (4) | திருமதி. ஆர். ஜீவராணி | மகள் |

ஆகிய நான்கு நபர்களின் பெயருக்கும், கூட்டாக உரிமை மாற்றம் செய்து கிரையம் வழங்குவது குறித்து மாநகர மன்றத்திற்கு ஒப்புதலுக்காக பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- ஒப்புதல் செய்யலாம் ந.க. எண் 27211 / 83 (சி.3)/ எம்.எச்.5

<u>மா.ம.தீர்மானம் எண் : 6 நாள் : 28.04.2008</u>

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 6

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி, தெற்கு மண்டலம் நகரளவு வார்டு எண் 10, பிளாக் எண். 42, நகரளவு எண். 2919 / 3, 2920 / 1 –ல் அமைந்துள்ள 2.11 ஏக்கர் பரப்புள்ள பூமியில் உள்ள விளையாட்டுத்திடல் (School Play Ground) என்று நகரமைப்புத்திட்ட எண். 13 –ன்படி உத்தேசித்திருப்பதை நீக்கி குடியிருப்புப் பகுதியாக நில உபயோகம் செய்து தரக்கோரி மனுதாரர்கள் (1) திருமதி. P. பழனியம்மாள் (2) திரு. P. தங்கவேல் (3) திரு. N. நாகராஜ் ஆகியோர் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு, கோயம்புத்தூர் மாநகராட்சி மூலம் விண்ணப்பித்தது – தொடர்பாக.

------------

கோயம்புத்தூர் மாநகராட்சி, தெற்கு மண்டலத்திற்குட்பட்ட நகரளவு எண். 10, பிளாக். 42 –ல் அமைந்துள்ள T.S.No. 2919 / 3, 2920 / 1-ல் உள்ள 2.11 ஏக்கர் பரப்புள்ள பூமியானது (1) திருமதி. P. பழனியம்மாள் (2) திரு. P. தங்கவேல் (3) திரு. N. நாகராஜ் ஆகியோருக்கு பாத்தியப்பட்டது. இம்மனையிடம் நகரமைப்புத் திட்ட எண். 13 –ன் பகுதியில் அமைகிறது. இத்திட்டத்தின்படி இம்மனையிடம் விளையாட்டுத்திடல் (School Play Ground) எனக்குறிப்பிடப்பட்டு, ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இத்திட்டத்தின்படி T.S.No. 2919 / 2, மற்றும் 2921 / 2-ல் அமைந்துள்ள மனையிடமும் விளையாட்டுத்திடலாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் இம்மனையிட உரிமையாளர்கள் திரு. சுப்ரமணியதேவர் மற்றும் திருமதி. தெய்வாணை அம்மாள் ஆகியோர் மேற்காண் இடத்தில் உள்ள இடத்தின் உபயோகத்தினை விளையாட்டுத்திடல் உபயோகத்தினை மாற்றி குடியிருப்பு உபயோகமாக மாற்றித்தர, நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு விண்ணப்பித்ததில் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள், நில உபயோகத்தினை மாற்றி குடியிருப்பகுதியாக உபயோகம் செய்ய உத்திரவிட்டுள்ளார்கள். மேலும் இதன்படி இப்பகுதி அங்கீகரிக்கப்பட்ட குடியிருப்பாகவும் நிலையில் உள்ளது. மேலும் நகரளவு எண்.2919/ 3ல் உள்ள மனையிடத்திற்கு அணுகுபாதையாக இம்மனையின் வடக்கு எல்லையில் இராமலிங்க ஜோதி நகர் குடியிருப்பு பகுதியில் அமைந்திருக்கும் 23 அடி அகல சாலை நிலையிலுள்ளது. மேலும் இம்மனையிடத்திற்கு தென்புறமாக 100 அடி அகல சாலையினை A1-A1 எனப்பெயரிடப்பட்டு இத்திட்டத்தின்படி உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டச்சாலையின் அகலத்தை 100 அடியிலிருந்து 60 அடி அகலத்திற்கு குறைக்கும் பட்சத்தில் இந்த 60 அடி அகல சாலைப்பகுதியினை தானமாகத்தர தயாராக உள்ளதாகவும், ரூ.50/- மதிப்புள்ள முத்திரைத்தாளில் மனுதாரர்கள் சம்மதம் தெரிவித்துள்ளார்கள்.

எனவே மேற்கூறிய விபரங்களை உள்ளூர் திட்டக்குழுமத்திற்கு தெரிவிக்கவும், மற்றும் விளையாட்டு நில உபயோகத்திலிருந்து குடியிருப்பாக நில உபயோகம் மாற்றம் செய்து தரக்கோரி மனுதாரர் சமர்ப்பித்துள்ள விண்ணப்பம் மற்றும் வரைபடத்தினை உள்ளூர் திட்டக்குழுமத்தின் மூலம் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு அனுப்ப நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவிற்கு பொருள் சமர்ப்பித்ததில், குழு தனது தீர்மான எண். 39 நாள். 7.12.2007 –ல் நில உபயோகம் செய்து குடியிருப்பு பகுதியாக செய்யக்கோரும் மனுதாரரின் கோரிக்கையினை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது என தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. எனவே இது குறித்து மாமன்றத்தின் ஒப்புதலுக்குப் பொருள் சமாப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு -

மாமன்றத்தின் முடிவிற்கும் மற்றும் ஒப்புதலுக்கும். ந.க. எண். 8753 / 07 / எச்1 (தெ)

**<u>மா.ம.தீர்மானம் எண் : 7 நாள் : 28.04.2008</u>**

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள நகரளவு எண். 2919/ 3-ல் உள்ள விளையாட்டுத் திடலுக்கென ஒதுக்கப்பட்ட சுமார் 1.40 ஏக்கர் நிலத்தினை விளையாட்டுத்திடல் உபயோகத்திலிருந்து குடியிருப்பு உபயோகத்திற்கு மாற்றம் செய்ய அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 7

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சியில் டெக்ஸ்கோ நிறுவனத்தினர் மூலம் 1.04.2008 முதல் 31.03.2009 முடிய ஓராண்டு காலத்திற்கு டெக்ஸ்கோ ஓட்டுநர்களை தினக்கூலி அடிப்படையில் பணிபுரிய ஒப்பந்தம் நீட்டிப்பு செய்தல் - தொடர்பாக

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ஒப்பந்த தினக்கூலி அடிப்படையில் 24 டெக்ஸ்கோ ஓட்டுநர்களை நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ஊதியம் ரூ.5484/- ம் அதற்கான சேவைக் கட்டணம் 12% அதற்குரிய சேவை வரிக்கட்டணம் 12% கல்வி வரிக்கட்டணம் 3% வழங்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். இந்த ஒப்பந்த காலம் 31.03.2008 உடன் முடிவடைகிறது.

இதனைத் தொடர்ந்து டெக்ஸ்கோ நிறுவனத்தினர் மேற்படி ஒப்பந்தத்தை 01.04.2008 முதல் 31.03.2009 முடிய மேலும் ஓராண்டுக்கு நீட்டிக்கும் பொருட்டு விருப்பம் தெரிவித்துள்ளனர். அதில் ஓட்டுநர் ஒருவருக்கு 8 மணி நேர பணிக்கு தினக்கூலி அடிப்படையில் மாத ஊதியம் ரூ.8552/- (சேவைக் கட்டணம் 12 % மற்றும் அதற்குரிய சேவை வரிக்கட்டணம் 12.36 % உட்பட) 25 ஓட்டுநர்களுக்கு மேற்குறிப்பிட்ட காலத்திற்கு வழங்குமாறு அவர்களது கடித எண் 6413/cbe/col/01 நாள் 31.03.2008-ல் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இம்மாநகராட்சியில் 24 டெக்ஸ்கோ ஓட்டுநர்கள் பணிபுரிந்து வருகின்றனர். எனவே தற்போது அவர்கள் கேட்டுக்கொண்டுள்ள கட்டண விகிதத்தில் 24 டெக்ஸ்கோ ஓட்டுநர்களை ஏற்கனவே உள்ள பொது நிபந்தனைகளுக்கு உட்பட்டு 01.04.2008 முதல் 31.03.2009 முடிய உள்ள ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த முறையில் பணிபுரிய ஆகும் செலவினம் ரூ.24,62,976/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- அனுமதிக்கலாம். ந.க.எண் 3497/ 07/ (எம்சி 5)எம்சி 7

**<u>மா.ம.தீர்மானம் எண் : 8 நாள் : 28.04.2008</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 8**

பொருள் : குத்தகை - கோயம்புத்தூர் மாநகராட்சி - கிழக்கு மண்டலம்-2008-2009ம் ஆண்டிற்கான குத்தகை இனங்கள் - பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியது - உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டது - மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

----------

கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட 2008-2009ம் ஆண்டிற்கான கீழ்குறிப்பிட்டுள்ள குத்தகை இனங்களுக்கு 1.4.2008 முதல் 31.3.2009 வரையிலான காலத்திற்கு ஏல இனங்களில் பெறப்படும் வருவாயை வசூலித்துக் கொள்வதற்கான உரிமைக்கு 18.02.2008, 05.03.2008, 17.3.2008, 26.03.2008 மற்றும் 31.03.2008 ஆகிய தேதிகளில் பொது ஏலம் / மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது.

ஏல இனங்கள்

1. சிங்காநல்லூர் தினசரி மார்க்கெட்டில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
2. சிங்காநல்லூர் ஆடு அறுவை மனை (8 கடைகளுடன் கூடியது ) கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
3. உப்பிலிபாளையம் ஆடு அறுவைமனை கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
4. சௌரிபாளையம் ஆடு அறுவைமனை கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
5. சிங்காநல்லூர் பேருந்து நிலையம் கட்டணக் கழிப்பிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
6. இராமநாதபுரம் மாநகராட்சி கட்டணக் கழிப்பிடம் - கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
7. புலியகுளம் மாநகராட்சி கட்டணக் கழிப்பிடம் - கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
8. பாப்பநாயக்கன்பாளையம் மாநகராட்சி கட்டணக் கழிப்பிடம் - கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
9. ரேஸ்கோர்ஸ் ரோடு மாநகராட்சி கட்டணக் கழிப்பிடம் - கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
10. சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் நுழையும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
11. சிங்காநல்லூர் பேருந்து நிலையம் வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
12. சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் துப்புரவுப் பணிகள் மேற்க்கொள்ளும் உரிமம்.
13. திருச்சி சாலை, சிங்காநல்லூர் மாநகராட்சி படகுத் துறையை பராமரித்து கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.(ஒப்படை செய்யும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு).
14. சிங்காநல்லூர் பேருந்து நிலையம் பொருட்கள் பாதுகாப்பு அறை கட்டணம் வசூல் செய்யும் உரிமம். (ஒப்படை செய்யும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு).

மேற்படி இனங்களுக்கு கீழ்குறிப்பிட்டுள்ளவாறு அதிகபட்சமாக ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

| எண் | குத்தகை இனங்கள் | சென்ற ஆண்டு ஏலத் தொகை | மூன்றாண்டு சராசரித் தொகை | நடப்பாண்டு ஏலத்தொகை | உயர்ந்தபட்ச கேள்விதாரர் |
|---|---|---|---|---|---|
| 1. | சிங்காநல்லூர் தினசரி மார்க்கெட் | 3,30,011 | 2,19,204 | 3,40,000 | திருமதி. விஜயகுமாரி |
| 2. | சிங்காநல்லூர் ஆடு அறுவைமனை | 66,511 | 54,220 | 67,300 | திருமதி. தங்கமணி |
| 3. | உப்பிலிபாளையம் ஆடு அறுவைமனை | 95,000 | 71,206 | 65,400 | திரு. பி. முனுசாமி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4. | சௌரிபாளையம் ஆடு அறுவைமனை | 66,601 | 39,934 | 1,15,021 | திரு.எம். ரகுராம் |
| 5. | சிங்காநல்லூர் பேருந்து நிலையம் கட்டணக் கழிப்பிடம் | 2,35,500 | 1,70,167 | 2,85,000 | திரு.கே.எம். முருகன் |
| 6. | இராமநாதபுரம் மாநகராட்சி கட்டணக் கழிப்பிடம் | 2,05,099 | 1,83,733 | 2,20,000 | திரு.எம். முத்துகிருஷ்ணன் |
| 7. | புலியகுளம் மாநகராட்சி கட்டணக் கழிப்பிடம் | 2,50,200 | 1,95,933 | 1,72,000 | திரு.எம். கிருஷ்ணமூர்த்தி |
| 8. | பா.நா.பாளையம் மாநகராட்சி கட்டணக் கழிப்பிடம் | 2,00,100 | 1,33,100 | 1,36,000 | திரு.எம். ரகுராம் |
| 9. | ரேஸ்கோர்ஸ் ரோடு மாநகராட்சி கட்டணக் கழிப்பிடம் | 41,000 | 21,867 | 52,000 | திரு.சி.ஆர். விநாயகம். |
| 10. | சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் பேருந்துகளுக்கு நுழைவுக்கட்டணம் வசூல் செய்தல் | 9,48,000 | 7,62,334 | 9,72,001 | திரு..எம்.ரகுராம் |
| 11. | சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூல் செய்தல் | 2,14,000 | 1,25,057 | 3,63,000 | திரு.வேலுமணி |
| 12. | சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் துப்புரவுப்பணிகள் மேற்கொள்ளும் உரிமம். | 1,950 (p.m.) | 3,317 | 19,900 | திரு. ஏ. ராதாகிருஷ்ணன் |
| 13. | திருச்சி சாலை, சிங்காநல்லூர் மாநகராட்சி படகுத் துறையை பராமரித்து கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 6,00,000 மூன்றாண்டுக்கு | 6,00,000 மூன்றாண்டுக்கு | 4,50,000 மூன்றாண்டுக்கு | திரு..எம்.ரகுராம் |
| 14. | சிங்காநல்லூர் பேருந்து நிலையம் பொருட்கள் பாதுகாப்பு அறை கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 19,836 மூன்றாண்டுக்கு | 19,836 மூன்றாண்டுக்கு | 27,072 மூன்றாண்டுக்கு | திரு.எம். ரகுராம் |

மேற்காண் இனங்களில் வரிசை எண். 1,2,4,5,6,9,10,11 குறிப்பிட்டுள்ள குத்தகை இனங்களுக்கு கோரப்பட்டுள்ள உயர்ந்தபட்ச கேள்வித் தொகைகள் சென்ற ஆண்டு ஏலத்தொகை மற்றும் மூன்றாண்டு சராசரித் தொகையைவிட அதிகமாக உள்ளது.

மேற்காண் இனங்களில் வரிசை எண். 3,7 குறிப்பிட்டுள்ள குத்தகை இனங்களுக்கு கோரப்பட்டுள்ள உயர்ந்தபட்ச கேள்வித் தொகைகள் சென்ற ஆண்டு ஏலத்தொகையைவிட குறைவாகவும், மூன்றாண்டு சராசரித் தொகையைவிட குறைவாகவும் உள்ளது, வரிசை எண். 8 குறிப்பிட்டுள்ள குத்தகை இனத்திற்கு கோரப்பட்டுள்ள உயர்ந்தபட்ச கேள்வித் தொகை சென்ற ஆண்டு ஏலத்தொகையைவிட குறைவாகவும், மூன்றாண்டு சராசரித் தொகையைவிட அதிகமாகவும் உள்ளது. மேற்படி இனங்களுக்கு நான்கு முறை ஏலத்திற்கு கொண்டுவந்தும் இத்தொகைக்கு மேல் ஏலம் கோரவோ அல்லது ஒப்பந்தப்புள்ளி அளிக்கவோ எவரும் முன்வரவில்லை.

வரிசை எண்.12-ல் குறிப்பிட்டுள்ள சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் துப்புரவுப்பணிகள் மேற்கொள்ளும் உரிமைக்கு துப்புரவுப்பணிகளுக்கு ஏழு நபர்களும் பேருந்து நிலைய காவல் பணிக்கு பகல் நேரத்தில் இருவரும், இரவு நேரக் காவலர் இருவரும் மற்றும் பேருந்து நிலையத்தில் பிளம்பர் cum எலக்ட்ரீசியன் ஒருவரும் நியமனம் செய்து துப்புரவுப்பணி மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற திருத்திய நிபந்தனைகளுடன் ஏலம்,ஒப்பந்தப்புள்ளி கோரியதில் குறைந்தபட்ச மாதாந்திர கேள்வித் தொகை 19,900/- க்கு திரு.இராதாகிருஷ்ணன் என்பவரால் ஏலம் கோரப்பட்டுள்ளது.

வரிசை எண்.14ல் குறிப்பிட்டுள்ள சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் பொருட்கள் பாதுகாப்பு அறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமைக்கு அதிகபட்ச கேள்வித் தொகையாக மூன்றாண்டுகளுக்கு ரூ.27,072/-க்கு ஏலம் கோரப்பட்டுள்ளது. இது சென்ற மூன்றாண்டு ஏலம் மற்றும் சராசரித் தொகையைவிட ரூ.7,236/- அதிகமாக உள்ளது.

வரிசை எண்.13-ல் குறிப்பிட்டுள்ள திருச்சி சாலை, சிங்காநல்லூர் மாநகராட்சி படகுத் துறையினை பராமரித்து கட்டணம் வசூல் செய்யும் உரிமைக்கு மூன்று முறை ஏலத்திற்கு கொண்டுவந்தும் மூன்றாவது முறையாக நடைபெற்ற ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் அதிகபட்சமாக திரு.எம். ரகுராம் என்பவரால் மூன்றாண்டுகளுக்கு ரூ.4,50,000/-க்கு ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்பட்டுள்ளது. இது சென்ற மூன்றாண்டு ஏலம் மற்றும் சராசரித் தொகையைவிட ரூ.1,50,000/- குறைவாக உள்ளது. படகுத் துறையில் பெரும்பான்மையான காலங்களில் ஆகாயத் தாமரைகள் சூழ்ந்து படகுகள் இயக்கம் முற்றிலும் தடைபடுவதால், இவ்வினத்திற்கு பெரும்பான்மையான ஏலதாரர்கள் பங்குகொள்ள முன்வரவில்லை. மேலும் இத்தொகைக்கு மேல் ஏலம் கோரவோ அல்லது ஒப்பந்தப்புள்ளி அளிக்கவோ எவரும் முன்வரவில்லை.

எனவே காலதாமதத்தை தவிர்க்கவும் மாநகராட்சிக்கு ஏற்படும் வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டும், ஒப்பந்தக் காலம் முடிவடைய குறுகியகால அவகாசமே உள்ளதால், அவசரஅவசியத்தை கருதி மேற்படி இனங்களை உயர்ந்தபட்ச கேள்விதாரருக்கு ஒப்படை செய்ய மன்ற அனுமதியை எதிர்நோக்கி கணக்குக் குழுத் தலைவர், வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுத் தலைவர் மற்றும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி 31.03.2008 ல் பெறப்பட்டு ஒப்படை செய்யப்பட்டுள்ளதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க. எண். 16426/ 2007 / கிஅ .7

<u>மா.ம.தீர்மானம் எண் : 9 நாள் : 28.04.2008</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 9

பொருள் : சிங்காநல்லூர் பேருந்து நிலையம் உணவகம் - நஞ்சுண்டாபுரம் ரோடு வணிகவளாக கடைகள் - கோயமுத்தூர் மாநகராட்சி - கிழக்கு மண்டலம் மறு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிக்கை கோரப்பட்டது - உயர்ந்தபட்ச கேள்விதாரருக்கு ஒப்படை செய்யப்பட்டதற்கு - மாமன்ற அனுமதி வேண்டுதல்-தொடர்பாக.

கோயமுத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட கிழகாணும் குத்தகை இனங்களுக்கு பொது ஏலம் , மறு பொது ஏலம் ,ஒப்பந்தப்புள்ளி அறிக்கை 15.11.2007, 7.12.2007, 18.02.2008, 05.03.2008 மற்றும் 17.03.2008 ஆகிய தேதிகளில் கோரப்பட்டது.

<u>ஏல இனங்கள்</u>

1. சிங்காநல்லூர்பேருந்து நிலையம் உணவகம் நடத்தும் உரிமம் . (ஒப்படை செய்யும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு)
2. நஞ்சுண்டாபுரம் ரோடு மாநகராட்சி வணிக வளாகக் கடை எண்.1 நடத்திக் கொள்ளும் உரிமம். (ஒப்படை செய்யும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு)
3. நஞ்சுண்டாபுரம் ரோடு மாநகராட்சி வணிக வளாகக் கடை எண்.2 நடத்திக் கொள்ளும் உரிமம்.( ஒப்படை செய்யும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு)

அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.4) துறை நாள் 3.7.2007-ல், பத்தி எண் 4 (i ) - ல் முதல் தடவையாக குத்தகைக்கு விடப்படும்போது நகராட்சியின் அசையா சொத்துக்கள் அனைத்தும் பொது ஏலத்தின் மூலமாக குத்தகைக்கு விடப்பட வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

நஞ்சுண்டாபுரம் மாநகராட்சி வணிக வளாகம் அமைந்துள்ள பகுதியில் உள்ள தனியார் கடைகளுக்கு அதிகபட்சமாக சதுரடி ஒன்றிற்கு ரூ.15/- வீதம் வசூல் செய்யப்படுவதாக வெளியிடப்பணியாளர்களின் அறிக்கை பெறப்பட்டுள்ளது. அதன்படி தலா 200 சதுரடி கொண்ட நஞ்சுண்டாபுரம் மாநகராட்சி வணிக வளாகம் இரண்டு கடைகளுக்கு நிர்ணயம் செய்யப்படும் பொழுது மாதாந்திர உரிமக் கட்டணத் தொகை ரூ.3,000/- ஆகும்.

எனவே தற்போது பொது ஏலம் மூலம் திரு. கே. ஹரி என்பவரால் கடை எண். 1-க்கு கோரப்பட்டுள்ள அதிகபட்ச மாதாந்திர உரிமக் கட்டணம் ரூ.6,000/- மற்றும் கடை எண்.2-க்கு திரு. விஜயமாதவன் என்பவரால் கோரப்பட்டுள்ள உயர்ந்தபட்ச மாதாந்திர உரிமக் கட்டண கேள்வித் தொகை ரூ.4,300/- என்பது சந்தை மதிப்பு அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படும் வாடகையைவிட அதிகமாக கோரப்பட்டுள்ளது.

சிங்காநல்லூர் பேருந்து நிலையத்திலுள்ள உணவகம் நடத்தும் உரிமைக்கு தொடர்ச்சியாக 5 முறை ஏலம் கோரப்பட்டதில், முதல் நான்கு முறை நடைபெற்ற ஏலத்தில் ஒருவரும் பங்குகொள்ளவில்லை. ஐந்தாவது முறையாக கோரிய மறு ஏலம் ஒப்பந்தப்புள்ளியில் அதிகபட்ச மாத வாடகையாக ரூ.3,750/-க்கு திரு. எம். ரகுராம் என்பவரால் கோரப்பட்டுள்ளது. இத்தொகையானது சென்ற முறை ஒப்படை செய்யப்பட்ட மாத வாடகைத் தொகையைவிட ரூ.400/- கூடுதலாக கேட்கப்பட்டுள்ளது. சிங்காநல்லூர் பேருந்து நிலையம் செயல்பட துவங்கிய நாள் முதல் உணவகம் நடத்தும் உரிமம் சரிவர ஏலம் போகாமலும், உணவகம் நடத்தப்படாமலும் பூட்டப்பட்டுள்ளது.

எனவே மாநகராட்சிக்கு ஏற்பட்டு வரும் நிதியிழப்பினை தவிர்க்கும் பொருட்டும் நஞ்சுண்டாபுரம் ரோடு வணிக வளாக கடை எண்-1,2 க்கு கோரப்பட்டுள்ள அதிகபட்ச கேள்வித்தொகை மற்றும் உணவகத்தினை பயன்பாட்டுக்கு கொண்டுவரும் நோக்கிலும் அவசர அவசியத்தைக் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி கணக்குக்குழு தலைவர் மற்றும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி 30.03.2008ல் பெறப்பட்டு மேற்படி உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு 01.04.2008 முதல் 31.03.2011 முடிய ஒப்படை செய்யப்பட்டதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க. எண். 16649/ 2006/ கிஅ.7

**மா.ம.தீர்மானம் எண் : 10 நாள் : 28.04.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 10**

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் 64-க்குட்பட்ட, மேட்டுப்பாளையம் சாலை மொத்த காய்கறி வளாகத்தில் சாலை புதுப்பிக்கக் கோரி இவ்வார்டு மாமன்ற உறுப்பினர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க மதிப்பீடு ரூ.20,00,000/- க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கான மதிப்பீட்டுத் தொகைக்கு நிர்வாகப் பொறியாளரால் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் இப்பணிக்கு 2007-2008 ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இப்பணிக்கான மதிப்பீட்டுத் தொகைக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண் 13081/07/MD4

**மா.ம.தீர்மானம் எண் : 11 நாள் : 28.04.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 11

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் 64-க்குட்பட்ட, மேட்டுப்பாளையம் சாலை மொத்த காய்கறி வளாகத்தில் உள்ள மைதான சாலையை புதுப்பிக்கக் கோரி இவ்வாடு மாமன்ற உறுப்பினர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க மதிப்பீடு ரூ.20,00,000/- க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கான மதிப்பீடு தொகைக்கு நிர்வாகப் பொறியாளரால் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் இப்பணிக்கு 2007-2008 ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இப்பணிக்கான மதிப்பீட்டுத் தொகைக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண் 13082/07/MD4

**மா.ம.தீர்மானம் எண் : 12 நாள் : 28.04.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 12

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட சங்கனூர் கிராமம், க.ச. எண். 145ஏ/ 1, உள்ளிட்ட புலங்களில் வசித்து வரும் பொதுமக்கள் வார்டு எண். 64 சேர்மன் ராஜ்நகர் பகுதிக்கு மேட்டுப்பாளையம் சாலையில் இருந்து கிழக்கு நோக்கி அணுகுசாலையாக பொதுமக்களால் உபயோகப்படுத்தப்பட்டு வந்த சாலை தற்சமயம் நீதிமன்ற உத்தரவுப்படி தனியார் இடம் என தீர்ப்பு பெறப்பட்டுள்ளதால் நில சொந்தக்காரர் வேலி போட்டு சாலையை அடைத்துள்ளார் எனவும் மீண்டும் சாலை அமைத்துத் தரும்படியும் கோரியுள்ளது – குறித்து.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட சங்கனூர் கிராமம் க.ச. எண். 145ஏ / 2 புலத்தில் 500 அடி நீளத்திற்கு தனியாருக்கு சொந்தமான சாலை பொதுமக்கள் உபயோகத்திற்கு அவசியமாக தேவைப்படுவதால் நில ஆர்ஜிதம் மூலம் நிலத்தை கையகப்படுத்தி சாலை அமைக்கவும், கையகப்படுத்தப்படும் நிலப்பரப்பிற்கு மாவட்ட ஆட்சியர் நிர்ணயிக்கும் தொகையினை சம்பந்தப்பட்ட நில உரிமையாளருக்கு இழப்பீட்டு தொகையாக வழங்கவும் மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நகரமைப்புக்குழு தனது தீர்மான எண். 46, நாள். 26.2.2008 –ல் அணுகுசாலை அமைக்க கோரும் நிலத்தின் உரிமையை சரிபார்த்து அதில் அரசு நிலம் ஏதும் இருப்பின் அதுபோக மீதமுள்ள தனியார் நிலத்தை கையகப்படுத்தி 23 அடி அகல சாலை அமைக்கலாம் என பரிந்துரை செய்து தீர்மானித்துள்ளது.

அலுவலகக் குறிப்பு . அனுமதிக்கலாம் ந.க. எண். 20681 / 07 / எச்1 (மே).

**மா.ம.தீர்மானம் எண் : 13 நாள் : 28.04.2008**

பொருள் ஒத்திவைக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 13

பொருள்: கோவை மாநகராட்சி – வரி – சொத்துவரி – பொது சீராய்வு சம்பந்தமாக.

--------------------

கோயம்புத்தூா் மாநகராட்சியில் 01-10-1998-ல் நடைபெற்ற சொத்துவரி பொதுச் சீராய்வுக்குப்பின் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறையான பொது சொத்து வரி சீராய்வு 01-10-2003-ல் நடைபெற வேண்டியது பற்றி அரசு முடிவெடுக்காததால் பொது சீராய்வு நடைபெறவில்லை. தற்போது 01-04-2008 முதல் நடத்தப்படவுள்ள பொது சொத்துவரி சீராய்வின்போது வரிசாா்ந்த விதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட வழிகாட்டுதல் கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டுமென மாநகராட்சி ஆணையாளா்களுக்கு அறிவுறுத்தப்பட்ட நகராட்சிகள் நிா்வாகம் மற்றும் நீா் வழங்கல் (தோ்தல்) துறையின் 12.11.2007ந் தேதிய அரசாணை (பல்வகை) எண்.150 மாமன்றத்தால் தீா்மான எண்.296 நாள் 27.03.2008 தேதி பதிவு செய்யப்பட்டது.

மேற்படி அரசானை மற்றும் நிா்வாக ஆணையரின் வழிகாட்டுதல்களில் சொதுத்துவரி உயா்வினால் உயா்த்தப்படும் வரிகள் கீழ்கண்ட வரம்பிற்கு நிா்ணயிக்கப்படுவதுடன், நிா்ணயிக்கப்பட்ட வரம்பு குறிப்பிட்ட அளவுக்குமேல் மிகையாகாமலும் எந்த விதத்திலும் திருத்திய வரி தற்போதைய வரியை விடக்குறைவாக இல்லாமலும் மேற்படி சீராய்வுப்பணி 01.04.2008 முதல் 30.06.2008-ல் முடிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

| வ.எண். | இனங்கள் | தற்போதைய வரியுடன் உயா்வு சதவீதம். |
|---|---|---|
| 1 | குடியிருப்புக் கட்டிடங்கள் (உரிமைதாரா் குடியிருப்பு அல்லது வாடகைக்கு) | 25 சதவீதம் |
| 2 | தொழிற்சாலை கட்டிடங்களுக்கு | 100 சதவீதம் |
| 3 | வா்த்தகக் கட்டிடங்களுக்கு | 150 சதவீதம் |
| 4 | அரசுக் கட்டிடங்களுக்கு | 50 சதவீதம் |
| 5 | தனியாா் கட்டிடங்களில் இயங்கும் மத்திய அரசு மாநில அரசு அலுவலகங்களுக்கு மேற்கண்ட வழிகாட்டுதல்கள்படி<br><br>1. தொழிற்சாலை கட்டிடங்களுக்கு<br>2. வா்த்தக கட்டிடங்களுக்கு | <br><br><br>100 சதவீதம்<br>150 சதவீதம் |
| 6 | முந்தைய சீராய்வுக் காலத்தில் வரி விதிப்பான கட்டிடங்களுக்கு<br>1. 01.10.2007 க்குப்பின் வரிவிதிப்பு செய்யப்பட்ட கட்டிடங்களுக்கு<br>2. 01.04.2006 முதல் 31.03.2006 க்குள்ளான கட்டிடங்களுக்கு<br>3. 01.04.2005 முதல் 31.03.2006 க்குள் வரிவிதிப்பு செய்யப்பட்ட கட்டிடங்களுக்கு<br>4. 01.04.2004 முதல் 31.03.2005 க்குள் வரிவிதிப்பு செய்யப்பட்ட கட்டிடங்களுக்கு<br>5. 01.04.2003 முதல் 31.03.2004 க்குள் வரிவிதிப்பு செய்யப்பட்ட கட்டிடங்களுக்கு | <br>சீராய்வு இல்லை<br>5 சதவீதம்<br>10 சதவீதம்<br>15 சதவீதம்<br>20 சதவீதம் |
| 7 | 1. விளம்பர போா்டுகள் (Hoardings)<br>2. தகவல் தொடா்பு கோபுரங்கள் (Communication Towers)<br>குறிப்பு - 7 –ல் உள்ள இனங்களுக்கு அரசின் வழிகாட்டுதல் பெற்றபின் வரி சீராய்வு செய்யலாம் | மாதிரி வரிவிதிப்பு அரசிடம் பெற்றபின் வரிவிதிப்பு செய்யலாம் |
| 8 | சிறப்பு இனங்கள்<br><br>நட்சத்திர விடுதிகள், தீம்பாா்க்,அடுக்குமாடி மையங்கள், வணிக வளாகங்கள், குளிரூட்டப்பட்ட திருமண மண்டபங்கள், சிறப்புமிகு பிரத்யேக மருத்துவமனைகள் (Super Special Hospital)<br><br>குறிப்பு - 8 ல் கண்டுள்ள சிறப்பு இனங்களுக்கு அரச மாவட்ட முதன்மை கண்காணிப்புப் பொறியாளா் அவா்களின் வழிகாட்டுதலைப் பெற்று மாதாந்திர வாடகை மதிப்பு நிா்ணயம் செய்து வரி விதிப்பு செய்யலாம் | <br><br>1.4.2008 லிருந்து தனியாக அடிப்படை மதிப்பு நிா்ணயித்து வரிவிதிப்பு செய்யலாம் |

01-04-2008 லிருந்து சொத்துவரி விதிப்பு செய்யப்படும் கட்டிடங்களுக்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்புடன் இனம் வாரியாக அரசு நிா்ணயம் செய்துள்ள உயா்வு சதவீதத்தை கூடுதலாக்கி கீழ்க்கண்டவாறு வரிவிதிப்பு செய்யலாம்.

| வ.எண். | இனம் | 01.10.1998-ல் சதுரடிக்கு அடிப்படை மதிப்பு ரூ. | 01-04-2008ல் சீராய்வின்படி உயா்வுக்கு சதுரடிக்கு அடிப்படை மதிப்பு ரூ. |
|---|---|---|---|
| 1 | குடியிருப்புக் கட்டிடங்கள் (உரிமைதாரா் குடியிருப்பு அல்லது வாடகைக்கு) | 3.00 | 3.75 |
| 2 | தொழிற்சாலை கட்டிடங்களுக்கு (இரு மடங்கு) | 5.00 | 10.00 |
| 3 | வா்த்தக கட்டிடங்களுக்கு (மூன்று மடங்கு) | | |
| | மருத்துவ மனைகள், கல்யாண மண்டபங்கள் மற்றும் கடைகள் | 6.50 | 19.50 |
| | அலுவலகம் | 7.50 | 22.50 |
| | திரையரங்குகள், உணவு விடுதிகள் தங்கும் விடுதிகள் | 7.80 | 23.40 |
| | நட்சத்திர ஹோட்டல் தங்கும் விடுதி | 11.20 | 33.60 |

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மான எண்.14 நாள் 22.04.08ன்படி மேற்காணும் பொருள் குறித்து மன்றத்தில் முடிவு செய்யலாம் என தீா்மானிக்கப்பட்டது. மாமன்றத்தின் முடிவிற்கு சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - மாமன்றம் முடிவு செய்யலாம். ந.க.எண்.2627/08/MC1

**மா.ம.தீா்மானம் எண் : 14 நாள் : 28.04.2008**

பொருள் ஒத்தி வைக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

## பொருள் எண் 14

வணக்கத்திற்குரிய மேயா், கோயம்புத்தூா் மாநகராட்சி அவா்களின் 12.3.2008 -ஆம் நாளைய மாவட்ட ஆட்சித் தலைவா் அவா்களுக்கு முகவரியிட்ட கடிதத்தில் முன்னாள் பாரதப் பிரதமா் ராஜிவ் காந்தி அவா்களின் திருஉருவச்சிலையை கீழ்க்கண்ட இடங்களில் ஏதாவது ஒன்றில் நிறுவ அனுமதி வழங்குமாறு கோரியதில், மேற்படி கடிதத்தின் மீது மாவட்ட ஆட்சியா் அவா்களின் ந.க.எண். 13705 / 08 / இ3 நாள். 4.4.2008 –ல் மாநகரக் காவல் ஆணையா், மாநகராட்சி ஆணையா் மற்றும் வருவாய் கோட்டாச்சியா் ஆகியோா்களின் கருத்தினைக் கோரப்பட்டுள்ளது.

1. செஞ்சிலுவை சங்கம் முன்பு உள்ள ரவுண்டானா.
2. கே.ஜி திரையரங்கிலிருந்து கிழக்கு நோக்கி வரும்போது உள்ள ரேஸ்கோா்ஸ் சந்திப்பில் உள்ள ரவுண்டானா
3. மாவட்ட ஆட்சியா் அலுவலகம் முன்பு உள்ள ரவுண்டானா
4. ரேஸ்கோா்ஸ் தாமஸ் பாா்க்கில் உள்ள ரவுண்டானா.

செஞ்சிலுவைச் சங்கம் முன்பு உள்ள ரவுண்டானாவில் டாக்டா் அம்பேத்காா் சிலை வைக்க மாமன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளதாலும், மாவட்ட ஆட்சியா் அலுவலகம் முன்பு உள்ள ரவுண்டானா போதிய இடவசதி இல்லாததாலும் தாமஸ் பூங்காவில் பொதுமக்கள் வந்து ஓய்வெடுப்பதாலும், கே.ஜி திரையரங்கில் இருந்து கிழக்கு நோக்கி செல்லும் சாலையும், ரேஸ்கோா்ஸ் சாலையும் சந்திப்பில் உள்ள போக்குவரத்து தீவில் (ரவுண்டானா) போதிய இடவசதி உள்ளதால் மேற்கூறிய இடத்தை முன்னால் பாரதப்பிரமா் ராஜிவ்காந்தி அவா்களின் திருவுருவச் சிலையினை கீழக்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு வைக்க மாமன்றம் ஒப்புதல் செய்யலாம்.

அரசாணை (நிலை) எண். 221, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 20.11.1998 –ன் படி புதிதாக சிலை நிறுவுவதற்கு கீழ்கண்ட நடைமுறைகளை பின்பற்ற வேண்டும்.

நிபந்தனை:

1. புதிதாக சிலை வைப்பதாக இருந்தால் அது அரசின் முன் அனுமதி பெற்ற பின்னரே வைக்கப்படவேண்டும்.
2. சிலைகளை வைப்பவர்களே பாதுகாப்பு மற்றும் பராமரிப்புப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும். மாநகராட்சியால் பராமரிக்க இயலாது.
3. சிலைகள் வெண்கலத்தால் நிறுவப்படவேண்டும்.

அலுவலகக் குறிப்பு -அங்கீகரிக்கலாம் ந.க.எண் 4161 / 2008 / எம்எச்5.

<u>மா.ம.தீர்மானம் எண் : 15 நாள் : 28.04.2008</u>

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 15

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி – ஓட்டுநர் பணியிடம் புதியதாக தோற்றுவித்தல் மற்றும் பணியிடங்களை நிரப்புவதற்கு அனுமதி கோருதல் - தொடர்பாக

பார்வை

1) அரசாணை நிலை எண் 139/ நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 27.05.1997

2) அரசாணை நிலை எண் 77/ நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 13.05.1998

3) அரசாணை நிலை எண் 224/ நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 24.09.1997

4) நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் கடிதம் ந.க.எண் 68972 /07 /மா.ந.அ 1 நாள். 14.12.2007

---

இம்மாநகராட்சியில் மண்டல அலுவலகங்கள் மற்றும் பிரதான அலுவலகத்தில் 121 வாகனங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மாநகராட்சியின் நிரந்தர ஓட்டுநர்கள் 24 வாகனங்களையும், 34 வாகனங்களை மாநகராட்சி துப்புரவு பணியாளர்களும், 5 வாகனங்களை மாநகராட்சி கிளீனர்களும், 13 வாகனங்களை என்.எம்.ஆர். பணியாளர்களும், 24 வாகனங்களை டெக்ஸ்கோ நிறுவனத்திடமிருந்து ஒப்பந்த முறையில் பெறப்பட்ட நபர்களும் தற்காலிகமாக இயக்கி வருகின்றனர். தற்போது 100 வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளன. மீதமுள்ள 21 வாகனங்கள் பழுதுகள் காரணமாகவும், போதிய ஓட்டுநர் இல்லாத காரணத்தாலும், மாற்று வாகனங்களாக பயன்படுத்துப்படுவதாலும் உபயோகிக்க இயலாத நிலை உள்ளது.

சமீபத்தில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கென பிரத்தியேகமாக 37 ரெபியூஸ் கலெக்டர் (Refuse Collector) வாகனங்களும், அலுவலர்களின் ஆய்வு பணிக்கென 3 புதிய பொலீரோ ஈப்புகள் (Bolero Jeeps) வாங்கப்பட்டுள்ளது. இது தவிர ஜவஹர்லால்நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்துவதற்கென 25 எண்ணிக்கை டம்பர் பிளேசர்(Dumper Placers), மற்றும் 3 எண்ணிக்கை ஸ்கிப் லிப்டர் (Skip Lifters), மற்றும் 12 எண்ணிக்கை சிறிய வகை டப்பர் லாரிகளை (Smaller Tippers) வாங்குவதற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

எனவே மொத்த வாகனங்களின் எண்ணிக்கை 201 (121+37+3+25+3=12) ஆகும். இம்மாநகராட்சியில் நாளது தேதியில் நிரந்தர ஓட்டுநர்களாக 24 நபர்கள் மட்டுமே உள்ளனர். மீதமுள்ள 177 ஓட்டுநர் பணியிடங்கள் புதியதாக தோற்றுவிக்கப்பட்டு அப்பணியிடங்களை விதிமுறைகளுக்குட்பட்டு நிரப்பப்பட வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

பார்வை 1-ல் கண்ட அரசாணை நிலை எண். 139 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 27.05.1997-ல் ஒரு வாகனத்திற்கு ஒரு ஓட்டுநர் பணியிடம் என்ற அடிப்படையில் பணியிடங்களை உருவாக்கிட அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 2-ல் கண்ட அரசாணை எண் 77 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 13.05.1998 –ல் மாநகராட்சி பொது சார்நிலை பணிவிதி வகுப்பு IV இனம் 1-க்கு உட்பட்ட ஓட்டுநர் பணியிடங்களை ஒரு வாகனத்திற்கு ஒரு ஓட்டுநர் என்ற அடிப்படையில் புதிதாக ஏற்படுத்திக்கொள்ள உரிய கருத்துருக்களை நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுப்பி பார்வை 3-ல் கண்ட அரசாணை எண் 224 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 24.9.1997-ன் அடிப்படையில் அனுமதி பெற அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு கடந்த 20.07.1997-ல் ஓட்டுநர் பணியிடங்களை ஏற்படுத்திக் கொள்ள அனுமதி கோரும் பிரேரனை அனுப்பப் பட்டதில், பார்வை 4-ல் கண்ட நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களது கடிதத்தில் மேற்படி புதிய ஓட்டுநர் பணியிடங்களை தோற்றுவிப்பதற்கும், பணியாளர்களை நியமித்தலுக்கும் மாமன்றத்தின் அனுமதியுடன் மன்றத் தீர்மானத்தின் நகலுடன் பிரேரனையை அனுப்பிவைக்க கேட்டுக் கொள்ளப்பட்டது.

எனவே மொத்த வாகனங்களின் எண்ணிக்கை 201 (121+37+3+25+3=12). இதில் ஏற்கனவே இம்மாநகராட்சியில் 24 நிரந்தர ஓட்டுநர்கள் மட்டுமே பணியில் உள்ளதால் மீதமுள்ள 177 ஓட்டுநர் பணியிடங்களை புதியதாக மேலும் தோற்றுவிக்கவும் விதிமுறைகளின்படி பணியிடங்களை நிரப்பிக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையரின் அனுமதி /அரசின் அனுமதி பெறவும், இதனால் ஏற்படும் கூடுதல் செலவினங்களை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- அனுமதிக்கலாம். ந.க.எண் 3911 /07/ (எம்சி 5) எம்சி 7

## மா.ம.தீர்மானம் எண் : 16 நாள் : 28.04.2008

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. அரசின் ஒப்புதலுடன் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டபின்பு தற்போது மாநகராட்சியில் ஓட்டுனர்களாக செயல்புரிந்துவரும் துப்புரவுப் பணியாளர்கள், கிளீனர்கள் மற்றும் என்.எம்.ஆர். பணியாளர்களில் ஓட்டுநர் பதவிக்கு தகுதி பெற்றுள்ள நபர்களை தேர்வு செய்து பணி நியமனம் செய்து கொள்ள தீர்மானிக்கப்பட்டது. ஓட்டுனர் பதவிக்கான கல்வித்தகுதி இல்லாதவர்களுக்கு பணி விதிகளை தளர்வு செய்து ஓட்டுனர்களாக நியமனம் செய்யும் வண்ணம் நகராட்சி நிர்வாக ஆணையர் மூலமாக அரசுக்கு கருத்துரு அனுப்பவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்துார் மாநகராட்சி

---

## மாமன்ற சிறப்புத் தீர்மானம் 2 நாள் : 28.04.2008

கோவை மாநகராட்சியில் சுகாதாரப் பணிகளில் துப்புரவுப் பணிகளை கவனிப்பதற்கு போதிய அளவிலான துப்புரவு ஆய்வாளர் இல்லாத காரணத்தால் ஏற்படும் பிரச்சனைகளுக்கு தீர்வுகாணும் வகையில் கீழ்கண்ட தீர்மானத்தை தி.மு.க. மாமன்றக்குழு மாமன்றத்தில் முன் வைக்கிறது.

கோவை மாநகராட்சியில் தற்போது உள்ள அரசு ஆணை எண் 237-ல் துப்புறவு ஆய்வாளர் (Sanitary Inspector) பணியிடம் 24 என உள்ளது. இப்பணியிடம் 72 வார்டுகளில் உள்ள துப்புறவுப் பணிகளை கவனித்து வருவதற்கு போதுமானதாக இல்லை. மேலும், தற்போது கோவை மாநகரமானது பல மடங்கு விரிவுபடுத்தப்பட்டு வரும் சூழ்நிலையில் Jnnurm திட்டத்தின்படி மேலும் கோவை மாநகரமானது வளர்ச்சியடைய உள்ளதால் அந்த சமயத்தில் கோவை மாநகரத்தில் ஏற்படக்கூடிய துப்புறவு பணிகள் மற்றும் நோய் தடுப்புப் பணிகளுக்கு தற்போதுள்ள துப்புரவு ஆய்வாளர் பணியிடங்கள் போதுமானதாக இல்லை என கருதுகிறோம். எனவே குறைந்த பட்சம் இரண்டு வார்டுகளுக்கு ஒரு துப்புறவு ஆய்வாளர் பணியிடம் தேவை என்பதை கருத்தில் கொண்டு குறைந்த பட்சம் 36 துப்புரவு ஆய்வாளர் பணியிடம் வேண்டி அரசுக்கு பரிந்துரை செய்ய மாமன்றம் தீர்மானம் நிறைவேற்றவேண்டும் என திராவிட முன்னேற்றக் கழக மாமன்றக்குழு கேட்டுக் கொள்கிறது.

**மா.ம.தீர்மான எண் : 17  நாள்  : 28.04.2008**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**மாமன்ற சிறப்புத் தீர்மானம் 3  நாள்  : 28.04.2008**

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலம் கிருஷ்ணாயபுரம் கிராமம் சர்வே எண் 132 /5-ல் உள்ள 55 சென்ட் நிலம் தாமோதரம் தர்ம ஸ்தாபனத்திற்கு சொந்தமானது. மேற்படி நிலத்தில் இருந்த கட்டிடத்தில் சுமார் 45 வருடங்களாக கோவை மாநகராட்சியின் நடுநிலைப்பள்ளி குத்தகை அடிப்படையில் இயங்கி வந்தது. மேற்படி கட்டிடம் பழுதடைந்ததால் 2004- ம் வருடம் முதல் மாநகராட்சியால் மேற்படி இடத்தில் பள்ளியை நடத்த இயலாத சூழ்நிலை ஏற்பட்டது. மாநகராட்சி செலுத்திவந்த குத்தகைத் தொகையை ஏற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பியதோடு, இடத்தை தம்மிடம் ஒப்படைக்குமாறு தாமோதரம் தர்ம ஸ்தாபனம் கோரிக்கை விடுத்ததின் பேரிலும் மாநகராட்சி வழக்கறிஞரின் சட்டக் கருத்தின் பேரிலும் வட்டாட்சியரின் சொத்துரிமை சான்றிதழின் பேரிலும் இடத்தை ந.க.எண். 6840/04/எச் 2 (வ) நாள் 22.2.2008 –ன்படி மேற்படி இடத்தை மாநகராட்சியால் திரும்ப வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி உத்திரவு மாமன்றத்தின் ஒப்புதல் இல்லாமல் வழங்கப்பட்டது என்பதனால் அவ்வுத்திரவினை ரத்து செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். மேலும் மேற்படி பகுதியில் மாநகராட்சிப் பள்ளியை வேறு இடத்தில் நடத்த போதிய இடம் ஏதும் இல்லாததாலும், ஏழை மக்கள் அதிகம் வாழும் அப்பகுதியில் மாநகராட்சிப் பள்ளியை நடத்துவது அவசியம் என்பதாலும், சுமார் 45 வருடங்களாக மாநகராட்சி குத்தகை செலுத்தி தமோதரம் தர்ம ஸ்தாபன நிலத்தை பள்ளிக்காக உபயோகித்து வந்ததாலும் மேலே விவரித்தபடி கிருஷ்ணராயபுரம் கிராமம் சர்வே எண் 132/ 5-ல் உள்ள 55 சென்ட் நிலத்தை நில ஆர்ஜித சட்டம் மூலம் கையகப்படுத்தி மாநகராட்சி பள்ளி அமைக்கவும் அதற்காகும் மொத்த செலவினங்களுக்கு அனுமதி அளித்து தீர்மானம் நிறைவேற்றித்தர நகரமைப்புக்குழு சார்பாக கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**மா.ம.தீர்மான எண் : 18  நாள்  : 28.04.2008**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி